ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 9 மார்ச் 2004 கானம் : 8

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 100 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 81 | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 71 | 11 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -75 | 15 |
| 7. | நாமமே இறைவன் | 18 |
| 8. | மாலே மணிவண்ணா - 18 | 21 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 19 | 23 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 102 | 26 |
| 11. | செய்திகள் | 30 |


சுவாசத்தையும், வலிமையையும் உய்த்தறியும் உயிருக்கு, வேகத்தையும் தருபவர் உள்நின்று இயக்கும் இறைவனே. மறைந்திருந்தே உங்களுக்கு நேசக்கரங்களை நீட்டி உதவுகிறார். பிறரால் கேட்க முடியாமல் இருக்கும் அவர், உங்களது பேச்சைக் கேட்கிறார். பிறரால் அறியமுடியாத அவர், உங்களது எண்ணங்களை அறிந்திருக்கிறார்.

**- ஸ்வாமி சிவானந்தா**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : சாமா தாளம் : ஆதி

*பல்லவி*

***பண்டரீ சென்றிடுவோம் வாரீர்***
***பாண்டுரங்கனை தரிசனம் செய்ய (பண்டரீ)***

*அனுபல்லவி*

***சந்த்ரபாகையில் ஸ்நாநம் செய்து***
***ஸாதுக்களை ஸேவித்திடலாம் (பண்டரீ)***

*சரணம்*

***ருக்மிணியின் சந்நதியில் ஸதா***
***ராம் க்ருஷ்ண ஹரீ என்றே பாடிடலாம்***
***முக்தியும் பெரிதல்ல இதைவிட***
***முரளீதரன் சொல்வது நிச்சயம் (பண்டரீ)***

*நாமாவளி*

***ஜய் ஜய் ராம் க்ருஷ்ண ஹரீ***
***ஜய் ஜய் பாண்டுரங்க ஹரீ***
***ஜய் ஜய் ராம் க்ருஷ்ண ஹரீ***
***ஜய் ஜய் வாஸுதேவ ஹரீ***

நம்முடைய ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த குடியாத்தம் மாணிக்கம் முதலியார் நம்முடைய ஸ்வாமிஜிக்கு மிகவும் ப்ரியமானவர். அவர் ஸமீபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உத்தரவுப்படி ஒரு ஹனுமான் கோவில் கட்டி, ஜனவரி 23-ம் தேதியன்று கும்பாபிஷேகம் செய்தார். அதில், ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டு சொற்பொழிவாற்றி, கும்பாபிஷேக வைபவத்தை முன்னின்று நடத்திவைத்தார்கள்.

பெங்களூரைச் சேர்ந்த திரு. வேங்கடேசன் தம்பதிகளுக்கு சொந்த கிராமம் திருநெல்வேலி அருகில் உள்ள ஸ்ரீவைகுண்டம். இது நவதிருப்பதிகளில் முதலானது. வெகுநாட்களாக வேங்கடேசன் ஸ்ரீ ஸ்வாமிஜியை நவதிருப்பதியை ஸேவிக்க அழைத்திருந்தார். ஜனவரி மாதம் 28, 29, 30 தேதிகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி நவதிருப்பதிக்கு பக்தர்களுடன் சென்று ஸேவித்தார்கள். கடைசிநாள், ஸ்ரீவைகுண்டத்தில் ராதாகல்யாணமும் நடைபெற்றது. வேங்கடேசன் தம்பதிகள் எல்லோருக்கும் வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கிருந்து கிளம்பி, திருப்பூர் சென்று பிப்ரவரி 1-ந் தேதி அன்று சென்னை சில்க்ஸ் ஸ்ரீ நந்தகோபால் அவர்களுடைய வீட்டு க்ருஹப்ரவேசத்தில் கலந்துகொண்டுவிட்டு, அபிராமி கோல்டு ஸ்டோரேஜ் வளாகத்தில் உள்ள பிள்ளையார் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டார்கள். கும்பாபிஷேக ஏற்பாடுகளை ஈரோட்டைச் சேர்ந்த ஸ்ரீ பத்மநாபன் அவர்கள் முன்னின்று நடத்தினார்.

பிறகு, சென்னை வந்துவிட்டு பிப்ரவரி மூன்றாம் தேதி அன்று ராஜபாளையத்தில், ஸ்ரீ N.R. க்ருஷ்ணமராஜா அவர்களின் 88-ஆம் பிறந்த தினத்தை ஒட்டி நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினார்கள். சுமார் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஸ்ரீ ஸ்வாமிஜியின் சொற்பொழிவை அமைதியாகக் கேட்டது மிகவும் சந்தோஷமாக இருந்தது.

RAMCO GROUP நிறுவனத்தார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தார்கள். RAMCO GROUP CHAIRMAN ஸ்ரீ ராமசுப்ரமண்யராஜா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அங்கு, அவர்கள் ஒரு வேதபாடசாலை நடத்தி வருகின்றார்கள். பதினெட்டு ஏக்கர் நிலப்பரப்பில், அழகான இயற்கை சூழ்நிலையில், நவீன வசதிகளுடன் அவர்கள் நடத்திவரும் பாடசாலை, பார்ப்பதற்கே மிகவும் ரம்யமாக உள்ளது. அதோடு மட்டும் இல்லாமல், சிருங்கேரி பீடாதிபதி ஸ்ரீ பாரதிதீர்த்த ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன், ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளுடைய பழைய நூல்களையும் புதுப்பித்து வெளியிட்டு வருவது மிகவும் ஒரு அரியதொண்டாகும். இது அவர்களுடைய குருபக்திக்கு ஒரு சான்றாகும். வேதபாடசாலை நடத்தினோம்; சாஸ்திர புத்தகங்களை புதுப்பித்தோம் என்பதோடு மட்டும் இல்லாமல், எல்லோருக்கும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்யமும், சாஸ்திர பரிச்சயமும் இருப்பது நம்பமுடியாத உண்மை.

ராஜபாளையம் உபன்யாஸம் முடிந்தவுடன், ஸ்ரீ ஸ்வாமிஜி இரவு அங்கிருந்து கிளம்பி சிவகாசி சென்று, அங்கு ஸத்ஸங்கத்தில் கலந்துகொண்டு பகவந்நாம ப்ரபாவத்தைப் பற்றி உபந்யாஸம் நிகழ்த்தினார்கள். ஸ்ரீமதி வாசுகிஜெயராஜ் அவர்கள் மற்றும் ஸ்ரீமதி உமாசுரேந்தர் அவர்கள் இல்லங்களுக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள். பிறகு அதை முடித்துக்கொண்டு, மறுநாள் பரமக்குடியில் ஸ்ரீ முருகன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டார்கள்.

பிப்ரவரி 4-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை திருச்சி திருவானைக்காவலில் ஸ்ரீ ஸ்வாமிஜி உபந்யாசம் செய்தார்கள். உபந்யாஸ ஏற்பாடுகளை ஸ்ரீராஜகோபாலன் செய்திருந்தார்கள். அதன் நடுவில் பிப்ரவரி ஐந்தாம் தேதி அன்று திருக்குலத்தோர் திருக்கோவில் திருப்பணி திட்டத்தின்கீழ் மூன்றாவது கோயிலாக திருவிடைமருதூர் அருகிலுள்ள விஸ்வநாதபுரத்தில் ஸ்ரீ மஹா மாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னின்று நடத்தினார்கள். அதில் தர்மாத்மா ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டார்கள். திருச்சி உபன்யாஸத்தின் பொழுது நடுவில் ஒருநாள் பின்னவாசல் சென்று வந்தார்கள். திருவானைக்காவல் திருக்கோயிலுக்கும், ஸ்ரீ ரங்கநாதர்

திருக்கோயிலுக்கும் சென்று தரிசனம் செய்து வந்தார்கள். மன்னார்குடியில் ஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகளின் பழைய வீடு இப்பொழுது சங்கரமடமாக உள்ளது. அங்கு நடந்த ராதாகல்யாணத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகளின் பெருமைகளைப் பேசினார்கள். கோவிலுக்குச் சென்று மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலனையும் ஸேவித்தார்கள். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelope மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2004011234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும்.

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

சந்தா எண், முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 1-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
publications@madhuramurali.org

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : எனக்கு, விமர்சையாக பூஜை செய்ய வேண்டும் என்று ஆசை. என்னிடம் அவ்வளவு வசதிகள் கிடையாது. பிறரிடம் இருந்து பொருட்களை கேட்டுப் பெற்று பூஜை செய்யலாமா?*

பதில் : தன்னிடம் இருப்பதைக்கொண்டு ஆடம்பரம் இல்லாமல் பூஜை செய்யவேண்டும். இதுதான் மிகவும் உயர்ந்தது. இந்த பூஜையைத்தான் இறைவன் ஏற்றுக்கொள்வான். பூஜை என்பது பொருட்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது அல்ல; நம்முடைய மனதை அர்ப்பணம் செய்வதுதான் பூஜை. பிறரிடம் இருந்து பொருட்களை வாங்கி பூஜை செய்வது மத்யமம்தான். பூஜைக்காக பொருட்களை சேகரிக்க ஆரம்பித்தோமானால், நாளடைவில் பொருட்களுக்காக பூஜை என்ற நிலை வந்துவிடும்.

*கேள்வி : வேதாந்த விசாரம் யாரால் எல்லாம் செய்யமுடிய வில்லையோ அவர்களுக்குதான் பக்தி மார்கமா?*

பதில் : யாரால் எல்லாம் பக்தி செய்ய முடியவில்லையோ, அவர்களுக்குத்தான் வேதாந்த விசாரம்; பக்தி ரஸரூபமானது. அது எல்லோருக்கும் வராது.

*கேள்வி : விஷ்ணுவும் ஒரு தேவன் என்றே சொல்லப்படுகின்றதே! அப்படி இருக்க, அவரே பரம்பொருள் என்று எப்படி கூறமுடியும்?*

பதில் : கற்பகவ்ருக்ஷத்தையும் நாம் ஒரு மரம் என்றுதான் குறிப்பிடுகின்றோம். ஆனால், அது மரமாக இருந்தபோதிலும், அது மற்ற மரங்கள்போல் எப்படி ஆகாதோ, அதுபோல், விஷ்ணுவையும் தேவன் என்று குறிப்பிட்டாலும் அவர் மற்ற தேவர்கள் போல் ஆகமாட்டார். அவரே பரம்பொருள்.

*கேள்வி : வேதத்தையும், மந்திரத்தையும் சொல்லும்பொழுது உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும் என்றும், அப்படி இல்லை என்றால் விபரீதபலன் ஏற்படும் என்றும் கூறுகின்றீர்கள்! அதே சமயத்தில்*

*ஸ்ரீமத் பாகவதத்தை தப்பும் தவறுமாக படித்தால்கூட பரவாயில்லை என்று கூறுகின்றீர்களே! என்ன காரணம்?*

பதில் : ஒரு குழந்தை, தன் தாயாரிடம் மழலை சொற்களால், 'தச்சு மம்மு' என்று கேட்கின்றது. தாயார் அந்த வார்த்தையை வைத்துக் கொண்டு அந்த குழந்தை எதை கேட்கின்றது என்பதை புரிந்து கொண்டு குழந்தைக்கு தயிர் சாதம் கொடுக்கிறாள். மேலும், அதனுடைய மழலைச் சொற்களையும் கேட்டு அவள் கோபம் அடைவதில்லை. மாறாக, ஆனந்தப்படுகின்றாள். அதே தாயார், ஒரு ஆசிரியையாக இருந்தால், தன் பள்ளியில் உள்ள ஒரு குழந்தை இப்படி மழலை பேசினால் அதைக்கேட்டு ஆனந்தப்படமாட்டாள். அதை திருத்தி சரியான உச்சரிப்புகளையே சொல்லிகொடுப்பாள். அதுபோல், மந்திரங்கள் தேவர்களைக் குறித்து சொல்லப்படுபவை. தேவர்கள், மந்திரங்களின் உச்சரிப்புகளையே பார்ப்பார்கள். ஆனால், தோத்திரங்கள் இறைவனைக் குறித்து பாடப்படுபவை. இறைவன், தோத்திரம் சொல்பவரின் ஹ்ருதயத்தைத்தான் பார்ப்பான். ஆகவே, ஸ்ரீமத்பாகவதம் போன்ற பக்தி நூல்களை தவறாக படித்தாலும் பரவாயில்லை. அதற்காக தவறாகத்தான் படிக்க வேண்டும் என்றும் கிடையாது.

***கேள்வி : மஹான்களுடைய பிறப்பு மற்ற எல்லோருடைய பிறப்பு போல்தான் உள்ளது. ஆனால், அவர்களின் முடிவு என்பது ஒவ்வொருவிதமாக இருக்கின்றதே! உதாரணமாக, மீரா போன்றவர்கள் பகவானுடன் கலந்துவிடுகின்றார்கள். போதேந்த்ர ஸ்வாமிகள், ராகவேந்த்ர ஸ்வாமிகள், ஸதாசிவ பிரம்மேந்திராள் போன்றவர்கள் ஜீவ ஸமாதி அடைந்துள்ளனர். காஞ்சி பெரியவர்கள், யோகிராம்சுரத்குமார் போன்றவர்கள் எந்த வித்யாசமும் இல்லாமல் சாதாரண மனிதர்கள் போன்றே சரீரத்தை தியாகம் செய்தார்கள். ரமணர் சித்தியாகும்பொழுது ஒரு ஜோதி கிளம்பிச் சென்றது. தியாகராஜ ஸ்வாமிகள் தலையில் ஒரு துவாரம் ஏற்பட்டு ஜோதி கிளம்பிச் சென்றது. இப்படி, மகான்களின் முடிவு ஒவ்வொருவிதமாக இருப்பதால் அவர்கள் அடைந்த நிலையில் வித்யாசம் உள்ளதாக சொல்லமுடியுமா?***

பதில் : இந்த மஹான்கள் அடைந்த தெய்வீக நிலையில் எந்த வித்யாசமும் கிடையாது. அவர்களின் மனோ**பா**வத்தில்தான் வித்யாசம். அவர்கள் வாழ்கின்ற காலத்தில், ஒவ்வொருவிதமான சாதனத்தை பின்பற்றிதானே ஜீவன்முக்தியை அடைந்துள்ளார்கள். அதைப் போலவே, அவர்கள் முடிவிலும், அவரவர்களுடைய மனே**பா**வத்தை ஒட்டி வித்யாசம் ஏற்படுகின்றது. ஜீவசமாதியில் மஹான்கள் சித்த சரீரத்துடன் இருந்து வருகின்றார்கள். அங்கு எந்தவிதமான க்ரியையும் கிடையாது. அந்த சமாதியை தரிசனம் செய்பவர்களுக்கு பலவிதமான திவ்யகாட்சிகள் ஏற்படுவது எல்லாம் அந்த மஹான்கள் தங்கள் மனதினால் ஸங்கல்பம் செய்வதே ஆகும். அதற்குக் காரணம், அங்கு வருபவர்களுக்கு சிரத்தையுடன்கூடிய பக்தியை ஏற்படுத்துவதற்கும், தான் அந்த இடத்திலேயே இருக்கின்றோம் என்பதை உணர்த்துவதற்கும்தான்.

---


ஸ்ரீ ஹரி:

## <u>எமது வெளியீடுகள்</u>

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

e-mail address for Books, Cassettes, CDs and Madhuramurali Magazine : publications@madhuramurali.org

# வேத கதைகள் - 81

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஸ ஸாஸ்த்ரிகள்

## அக்னிச்சயனம்

சயனம் என்பது அக்னி பகவானுக்கு ஒரு பீடம் அமைத்தது போல செய்யப்படுவதாகும். கற்களைக்கொண்டு ஐந்து அடுக்காக செய்யப்படுவதாகும். ஒவ்வொன்றிற்கும் முறையாக ப்ரதம சிதி, த்விதீய சிதி, த்ருதீய சிதி, சதுர்த்த சிதி, பஞ்சம் சிதி என்று பெயர்கள். இந்த ஒவ்வொரு சிதிகளையும் க்ருஷ்ண யஜுர் வேதம் ஐந்தாவது காண்டத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. இந்த சிதிகள் விஷயமாக ஒரு கதை கூறப்பட்டுள்ளது.

பூமி, அந்தரிக்ஷம், துயுலோகம் இவ்விதம் மூன்றாக பிரிந்து இருக்கிற இவ்வுலகமானது படைப்பதற்கு முன்பு உருவமற்றதாகவே இருந்தது. ஆனால், ஜலம் மட்டும் தான் இருந்தது. அந்த ஜலத்தில் வேறு பூதத்தின் சேர்க்கை இல்லை. எப்பொழுதும் நீராகவே இருந்தது. அப்பொழுது, சிருஷ்டிக்கிற ப்ரஜாபதி, தான் இருப்பதற்கு ஆதாரம் எதுவாக இருக்க முடியும் என்று விசாரித்து சயனத்தில் உள்ள முதல் சிதியை கண்டுபிடித்து, அதை ஜலத்தில் வைத்தார். அந்த சிதியானது இந்த பூமியாக ஆயிற்று. அந்த பூமியில் ப்ரஜாபதி அமர்ந்தார். விச்வகர்மா என்று மற்றொருவர் தான் அமர்வதற்கு ஆதாரத்தை அடையாதவராக, பூமியில் அமர்ந்து இருக்கும் ப்ரஜாபதியை, ''உன் அருகில் நான் உட்காருகிறேன். எனக்கும் இடம் அளிப்பாயாக'' என்று வேண்டினார். ப்ரஜாபதியானவர் அதற்கு, ''உனக்கு இருப்பிடம் கிடையாது'' என்று விச்வகர்மாவை பார்த்துக் கூறினார். பிறகு விச்வகர்மாவானவர் தனக்கு ஆதாரமாக எது கிடைக்கப்போகிறது என்று விசாரித்து இரண்டாவது சிதியை கண்டுபிடித்து பூமியின் மேல் வைத்தார். அந்த இரண்டாவது சிதியானது அந்தரிஷமாக ஆயிற்று. அதில் விச்வகர்மா அமர்ந்தார்.

பிறகு யக்ஞ புருஷன் தனக்கும் இடம் வேண்டியபொழுது ப்ரஜாபதி முடியாது என்று கூறி விட்டார். விச்வகர்மா, ''எனக்கு உத்கோசம் (லஞ்சம்) அளித்தால் உனக்கு இடம் அளிக்கிறேன்'' என்றார். உடன் யக்ஞ புருஷரும், திச்யாம் என்ற இஷ்டிகளை விச்வகர்மாவிற்கு லஞ்சமாக அளித்தார். அதனால், யக்ஞபுருஷரும் அமர்ந்தார். பிறகு, பரமேஷ்டி என்பவர் ப்ரஜாபதி, விச்வகர்மா இருவர்களையும் தனக்கு இடம் அளிக்குமாறு வேண்டினார். இருவரும் முடியாது என்று கூறிவிட்டனர்.

உடன் பரமேஷ்டி நன்கு ஆலோசித்து மூன்றாவது சிதியை கண்டுபிடித்து அதை இரண்டாவது சிதியின் மேல் வைத்தார். அது த்யுலோகமாக ஆயிற்று. பரமேஷ்டி அதில் அமர்ந்தார். பிறகு, ஆதித்யன் தனக்கு இடம் அளிக்குமாறு ப்ரஜாபதி, விச்வகர்மா இருவரையும் வேண்டினார். இருவர்களும் முடியாது என்று கூறிவிட்டனர். பிறகு பரமேஷ்டியை பார்த்து தனக்கு இடம் அளிக்குமாறு வேண்டினார். பரமேஷ்டி, லஞ்சம் கொடுத்தால் இடம் அளிப்பேன் என்றார். உடன் ஆதித்யன், லோகம்ப்ருனா என்ற இஷ்டியை பரமேஷ்டிக்கு லஞ்சமாக அளித்தார். அதனால் ஆதித்யனும் த்யுலோகத்தில் இடம் பெற்றார். பிறகு சில ரிஷிகள் இந்த மூவரையும் பார்த்து தங்களுக்கு இடம் வேண்டினர். இந்த மூவரும் உத்கோசத்தை எதிர்பார்த்தனர். ரிஷிகளும் 4,5 இந்த இரண்டு சிதிகளையும் அவர்களுக்கு அளித்தனர். அதனால், ரிஷிகளும் இடம் பெற்றனர். இவ்வாறாக சிதிகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இதை அறிந்தவன் எல்லா நன்மைகளையும் அடைகிறான்.

---


## அறிவிப்பு

1. மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

   ''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

2. மதுரமுரளி விஷயமாகவும், மிஷன் வெளியீடுகள், VCD, CD, கேசட்கள் விஷயமாகவும் e-mail அனுப்ப விரும்புபவர்கள் "publications@madhuramurali.org" என்ற e-mail IDக்கு அனுப்பவும்.

# எந்தரோ மஹானுபாவுலு - 71

ஒரு நாள் மஹாப்ரபு, கோபீ **பா**வத்தில் உரக்க, ''கோபீ'', ''கோபீ'' என்று புலம்பிக்கொண்டிருந்தார். மஹாப்ரபுவின் தந்தைக்கு தெரிந்த ஒரு பண்டிதர் அன்று வந்திருந்தார். அவர் சாஸ்திரத்தில் கரைதேர்ந்தவர். ஆனால், ப்ரேம பக்தியைப் புரிந்துகொள்ள முடியாதவர். அவர் நிமாயியிடம், ''என்ன! கோபீ, கோபீ என்றால் என்ன புண்யம்? க்ருஷ்ண க்ருஷ்ண என்றால் நாமகீர்த்தனமாகும். 'சாஸ்திர சம்மதமான'' முறையுமாகும் என்றார். இதைக் கேட்ட மஹாப்ரபு அவரை, யாரோ க்ருஷ்ணனுடைய சகா தன்னை ஏமாற்றுவதாக நினைத்துக்கொண்டு **பா**வ ஆவேசத்தில் ஒரு கழியை எடுத்துக் கொண்டு அவரை அடிக்கப் பாய்ந்தார். பண்டிதரின் படிப்பெல்லாம் பறந்துவிட்டது! ஓட்டமெடுத்தார். ப்ரபுவும் விடாமல் துரத்திக்கொண்டு ஓடினார். தோளிலிருந்து துப்பட்டா கீழே விழுந்தது. பை நழுவியது. மூச்சிரைக்க அவர் ஓடுவதைக் கண்ட பக்தர்கள், பின்னால் ப்ரபுவும் ஓடிவருவதைக் கண்டு அவரைக் கட்டிப்பிடித்து நிறுத்தினர். ப்ரபு மூர்ச்சையானார்.

பண்டிதர் வெகு தூரம் ஓடி திரும்பிப் பார்த்தார். ப்ரபுவைக் காணாமல் நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார். வியர்வை வழிய நிற்கும் அவரை எல்லோரும் விதம் விதமாக வினவினார்கள். அவரால் ஒன்றும் கூற முடியவில்லை! சிறிது நேரம் கழித்து அவர் கூறினார் - ''என்ன சொல்வேன்! ஜகன்னாதமிச்ராவின் பையன் நிமாயி பெரிய பக்தனாகிவிட்டான் என்று கேள்விப்பட்டு அவனைப் பார்க்கலாம் என்று போனேன். அவன் என்னவோ, ''கோபீ கோபீ'' என்று புலம்பிக்கொண்டிருந்தான். ஏம்பா! நீ படித்தவனாயிற்றே! சாஸ்திர விரோதமாக ஏன் கத்துகிறாய்? க்ருஷ்ண! க்ருஷ்ண! என்று கூறக் கூடாதா? என்றேன். அவன் என்னவோ கழியை எடுத்துக் கொண்டு என்னை அடிக்க வந்துவிட்டான். இதில் என்ன பக்தி இருக்கிறது! க்ரூரமாக இருக்கிறதே! பக்தன் என்றால் அஹிம்ஸையுடன் சாந்தமாக எல்லா ப்ராணிகளிடத்திலும் தயையுடன் இருக்க வேண்டாமோ!'' என்று பெரிய உரையே நிகழ்த்தினார். பிறகு அவர், ''எனக்கு ஆயிரம் சிஷ்யர்கள் இருக்கிறார்கள். நான் சமிக்ஞை செய்தால் போதும். வந்து நிமாயியையும் அவரது பக்தர்களையும்

நொறுக்கிவிடுவார்கள், என்ன செய்கிறேன் பார்'' என்று கர்ஜித்துவிட்டு சென்று தன் சிஷ்யர்களிடம் நடந்ததைச் சொல்ல, அவரது சில பொறாமை பிடித்த சிஷ்யர்கள், உடனே சண்டைக்குக் கிளம்ப மற்ற சில நல்ல அறிவுள்ள சிஷ்யர்கள் இப்போது ஒன்றும் நேரவில்லையே! இன்னும் சிறிது நாட்கள் பார்க்கலாம். பிறகு என்ன செய்வது என்று முடிவு எடுக்கலாம் என்று அவர்களை சமாதானப்படுத்தினர். **பா**வ ஆவேசம் கலைந்து ப்ரபு சாதாரண நிலையை எய்தினதும், அவருக்கு நடந்தது பற்றி தெரிவிக்கப்பட்டது. அவர் தனது செய்கைக்கு மிகவும் வருந்தினார். ஏற்கனவே, அவர் தனது வீடு, இஷ்டமித்திரர்கள், பக்தர்கள், கீர்த்தனம் ஆகியவற்றில் உதாசீனமாக இருந்துவந்தார். இந்த நிகழ்ச்சியால் இப்போது அவர் மேலும் மனது வெதும்பி தனிமையை நாடலானார். ஒரு பெரிய விரஹாக்னி அவரை சூழ்ந்துகொண்டது. அவர் மனது இப்போது அனைத்தையும் துறந்து மக்களின் நலனிற்காக சன்யாஸ நிலையை ஏற்க விரும்பியது.

மஹாப்ரபுவின் மனதில் வைராக்யத்தின் பேரலைகளின் இரைச்சல் எப்போதும் இருந்ததால் அவரது மனம் பெரிய த்யாகத்தைச் செய்வதற்குத் துடித்தது. அவரது வீட்டில் அவருக்கு எந்தத் தடையும் இல்லை. அங்கிருந்துகொண்டே உலகிற்கு நன்மை செய்துகொண்டுதான் இருந்தார். இருந்தாலும், பகவன்நாமத்தை உலகம் முழுவதும் பரப்ப விரும்பிய அவர் நவத்வீபத்தில், ஒரு வீட்டின் தலைவனாக ஒரு ஸ்த்ரீக்கு கணவனாக மட்டும் எப்படி வாழ முடியும்? அவர் சன்யாஸதீக்ஷை ஏற்பதற்கு ஏங்கினார்.

சம்ஸார சுகங்களை த்யாகம் செய்தால்தான் பகவத்ப்ராப்தி ஏற்படும். சன்யாஸம் என்றாலே ஆசைகளையும், போகங்களையும் துறந்து பகவானிடம் மட்டும் ஈடுபாடு கொள்வதுதானே. சன்யாஸம் இல்லாமல் பக்தி எப்படி ஏற்படும். ஞானம் வேண்டுமானாலும் சன்யாஸம் இன்றி சித்திக்கலாம். ஆனால், ஒருபோதும் துறவு வாழ்வு இல்லாமல் பக்தி ஏற்படவே செய்யாது. பக்தி மார்க்கத்தின் பகவானான நாரதர் ப்ரஹ்மசாரிதான். அவர் தக்ஷப்ராஜபதியின் பதினொன்று, பன்னிரெண்டு ஆயிரம் புத்திரர்களான சபலாச்வர்களையும் ஹரிதாச்வர்களையும் சன்யாஸி ஆக்கினார் அல்லவா? பகவானின் அவதாரங்களான பரசுராமர், வாமனர், ஸனத்குமாரர்கள் அனைவரும் சன்யாஸிகள்தான். பக்திமார்க்க

ஸ்தாபகர்களான ராமானுஜர், நிம்பார்க்கர், வல்லபர், மத்வாசார்யர் ஆகியோரும் சன்யாஸிகள்தான். இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். சன்யாஸத்தின் உயர்வை யார் மறுக்க முடியும்? மஹாப்ரபுவுக்கும் சன்யாஸத்தில் அதிதீவிர நாட்டம் ஏற்பட்டது.

இந்த சமயத்தில் கட்வா கிராமத்தைச் சேர்ந்த கேசவபாரதி என்னும் தண்டி சன்யாஸி நவத்வீபத்திற்க்கு வந்து சேர்ந்தார். அவரை தரிசித்த உடன் ப்ரபு அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். ப்ரபுவின் உடலில் ஏற்பட்ட ப்ரேமலக்ஷணங்களைக் கண்டு கேசவ பாரதி ஸ்தம்பித்துவிட்டார். உடனே அவர் ப்ரபுவைப்பார்த்து, ''நீங்கள் நாரதரா? ப்ரஹ்லாதரா? ப்ரேமையே உருவெடுத்து வந்தாற்போல் இருக்கிறீர்களே!'' என்று அதிசயித்தார்.

கேசவபாரதியின் சொற்களைக்கேட்டு கத்கதமடைந்த ப்ரபு அவரது சரணங்களைப் பற்றிக்கொண்டு, ''நீங்கள்தான் நரரூபத்திலிருக்கும் சாக்ஷாத் நாராயணன். என்னைப் போன்ற க்ருஹஸ்தன் வீட்டிற்கு வந்து எங்களைப் பாவனமாக்கியுள்ளீர்கள். தயவுசெய்து க்ருபை பண்ணி என்னை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவியுங்கள்'' என்று கெஞ்சினார்.

கேசவபாரதி, ''தங்கள் சரீரத்தில் பூரணமாக பகவத்தன்மையின் சின்னங்கள் நிரம்பியுள்ளன. நீங்கள் ப்ரேமாவதாரம்! உங்களது தரிசனத்தால் எனக்கு பகவானை நேரில் கண்டாற்போல் பரவசம் ஏற்படுகிறது!'' என்றார். ப்ரபுவும் விடாமல், ''நீங்கள் பகவானுக்கு ப்ரியமானவர். உங்கள் ஹ்ருதயத்தில் பகவான் எப்பொழுதும் குடியிருக்கிறார்! உங்கள் கண்களில் ஸ்ரீ கிருஷ்ணனின் நிழல் எப்போதும் படிந்துள்ளது. அதனால், சராசரம் முழுவதும் உங்களுக்கு பகவானாகவே தரிசனமாகிறது'' என்றார். இப்படி இரண்டு மஹாபுருஷர்களுக்கிடையில் ப்ரேம சல்லாபம் நடந்தது. இதற்குள் சசீமாதா போஜனம் தயார் செய்ய ப்ரபு மிகுந்த ச்ரத்தையுடன் கேசவபாரதிக்கு அன்று பிக்ஷை செய்வித்தார். அடுத்தநாள் கேசவபாரதி கங்கைக்கரை வழியாக தனது ஆச்ரமத்திற்குச் சென்றுவிட்டார். ப்ரபு இப்போது முன்பைவிட அதிகம் தவிக்க ஆரம்பித்தார். அதன் முடிவாக சன்யாஸத்தை ஏற்பதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தார். ஏனென்றால், சாஸ்திரங்கள் தியாகத்தில்தான் பரமஸுகம் ஏற்படும் என அறுதியிட்டுக் கூறுகின்றனவே!

_'Op\p'O''TzuRXp{X' p\p'O''TzOT:$
<'Ep\p'O''Tzcq'SzOYp\p'O''Tz_'sAXo$$

இதன் அர்த்தம் - ஸத்யத்தை அவலம்பிப்பது ஒன்றினாலேயே ஸகல தர்மங்களை அனுஷ்டிததின் பலன் கிட்டும். மௌனத்தை அனுஷ்டித்து ஸகல தபஸ்ஸின் பலனைப் பெறலாம். ஸத், அஸத் விசாரத்தினலேயே உயர்ந்து ஞானம் கைகூடும். ஸர்வஸ்வ த்யாகத்தினாலேயே பரமச்ரேஷ்டமான ஸுகத்தைப் பெறலாம் என்பதாகும். இனி மஹாப்ரபு சன்யாஸத்திற்காக செய்த ஒவ்வொரு செயல்களையும் முறையே பார்ப்போம்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

*ஸ்ரீ ஹரி:*

## மஹாமந்திர நாமஸங்கீர்த்தன ஸப்தாஹம்

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் ப்ரேரணையின்படி ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியினால் சென்னை மாநகரில் தற்பொழுது நிலவி வரும் தண்ணீர் கஷ்டம் நீங்க, மழை வேண்டி

4.3.2004 முதல் 10.3.2004 வரை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

மஹாமந்திர நாமஸங்கீர்த்தன ஸப்தாஹம் நங்கநல்லூர் கோகுலம் மண்டலியினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறவுள்ளது.

பக்தகோடி பெருமக்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு குருவருளுக்கும் பகவத் க்ருபைக்கும் பாத்திரர் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இடம் : **ஸ்ரீநிதி ஹால்,** எண் : 4.
21-வது தெரு, நங்கநல்லூர், சென்னை - 600 061
Contact போன் : 22241018, 9840374050

பூர்த்திநாளன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொள்வார்கள்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 75

சென்னையில் உள்ள ஒரு பிரபலமான பள்ளிக்கூடம். அங்கு அஸெம்பிளி ஹாலில் 8-ஆம் வகுப்பு மாணவர்கள் கூடியிருந்தனர். அவர்களிடம் ஒரு சலசலப்பு. ஆசிரியர் உள்ளே நுழைந்ததும் அமைதியாகிவிட்டனர். அவர் மாணவர்களைப் பார்த்து, ''இன்றைக்கு ஒரு Management Concept பார்க்கப் போகிறோம்'' என்றார். மாணவர்கள் எல்லோர் முகத்திலும் ஒரு எதிர்பார்ப்பு. அப்பொழுது ஆசிரியர், கரும்பலகையில் Time Management என்று எழுதிக்கொண்டே, ''சரியான முறையில் நமது நேரத்தை செலவழிப்பது எப்படி என்பதை இன்று பார்ப்போமா?'' என்றார்.

முதல் வரிசையில் உள்ள ஒரு மாணவனை அழைத்து, ஒரு பெரிய பாத்திரத்தைக் கொண்டுவரச் சொன்னார். அவன் கொண்டு வந்ததும், ''நீ இப்பொழுது என்ன செய்ய வேண்டும் தெரியுமா? ஏதாவது பொருட்களைக் கொண்டு இந்தப் பாத்திரம் முழுவதுமாக நிரப்பவேண்டும்!'' என்றார். அந்த மாணவனும் அருகில் உள்ள விளையாட்டு மைதானத்திற்குச் சென்று பெரியகற்களை எடுத்துக் கொண்டு வந்து அந்த பாத்திரத்தை நிரப்பினான். ஆசிரியர் அவனிடம், ''பாத்திரம் நிரம்பிவிட்டதா?'' என்று வினவினார். மாணவனும், ''ஆம்! பாத்திரம் நிரம்பிவிட்டது'' என்றான். பிறகு ஆசிரியர் மற்ற மாணவர்களைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார். அவர்களில் ஒருவன், பாத்திரம் நிரம்பவில்லை என்றும், தனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கும்படியும் கேட்டான்.

ஆசிரியரும் தலையசைத்து, ''சரி'' என்று சொல்லவே, அவன் அதே மைதானத்திற்குச் சென்று, சிறுகற்களையும், மணலையும் ஒரு தட்டில் கொண்டுவந்து, அந்த பாத்திரத்தில் உள்ள பெரிய கற்களுக்கிடையே நிரப்பினான். இப்பொழுது ஆசிரியர் அவனைப் பார்த்து, ''பாத்திரம் நிரம்பிவிட்டதா?'' என்றார். அவனும், ''ஆம்! இப்பொழுது பாத்திரம் நிரம்பிவிட்டது'' என்றான். மற்ற மாணவர்களும் அவன் சொன்னதை ஆமோதித்தனர். ஆனால், ஆசிரியரோ, ''இல்லை! இல்லை!! பாத்திரம் நிரம்பவில்லை'' என்றார். மாணவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டனர். ஆசிரியர் மற்றொரு

மாணவனைக் கூப்பிட்டு தண்ணீர் கொண்டுவந்து அந்தப் பாத்திரத்தில் ஊற்றச் சொன்னார். அவனும் அப்படியே செய்தான். இப்பொழுது ஆசிரியர் அந்த மாணவனைப் பார்த்து, ''பாத்திரம் நிரம்பிவிட்டதா?'' என்றார், அவனும் ''ஆம்'' என்றான்.

ஆசிரியர் மற்ற மாணவர்களைப் பார்த்து வினவ, மாணவர்கள் ஒருவரும் பதில் சொல்லவில்லை. சிறிதுநேரம் என்ன சொல்வது என்று விழித்தனர். சிலர், ''பாத்திரம் நிரம்பிவிட்டது'' என்றனர். சிலர் ''இல்லை'' என்றனர். சிலர், பதில் ஒன்றும் சொல்லவில்லை. இப்படி அவர்களின் பதில்களில் ஒரு குழப்பம். இப்பொழுது ஆசிரியரோ சிறிது உப்பைக் கொண்டு வரச் சொல்லி, அதில் போட்டார். அதுவும் கரைந்தது. இதைப்பார்த்து வாயடைத்துப்போன மாணவர்களைப் பார்த்து ஆசிரியர், ''இப்பொழுது பாத்திரம் நிரம்பிவிட்டது'' என்றார். பிறகு அவர்களைப் பார்த்து, ''இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்துகொண்டீர்கள்?'' என்று வினவினார்.

அவர்களில் ஒரு மாணவன் எழுந்து, ''அன்றாட வாழ்க்கையில் நாம் தினமும் பல காரியங்களைச் செய்கிறோம். ஓய்வில்லாமல், எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலையில் இருப்பதால் ஒரு சில காரியங்களை தள்ளிப்போடுகிறோம். சில காரியங்களை செய்ய நேரமில்லாமல் விட்டும் விடுகிறோம். நேரமின்மையே இதற்குக் காரணம் என்றும் நாம் கூறுகிறோம். ஆனால், உண்மையில் நிதானமாக ஆலோசித்து, சரியான முறையில் திட்டமிட்டால், எல்லா காரியங்களும் செய்வதற்கு நமக்கு நேரம் உள்ளது என்றும், நேரமின்மை என்பது ஒரு பிரமை என்றும் விளங்குகிறது'' என்று கூறினான்.

ஆசிரியர் அவனை அழைத்து அந்த பாத்திரத்தில் இருப்பதை வெளியே எடுத்து வைக்கச் சொன்னார். அவனும் தண்ணீரை மற்றொரு பாத்திரத்தில் ஊற்றிவிட்டு மணல், சிறுகற்கள், பெரியகற்கள் முதலியவற்றை தனித்தனியே எடுத்து வைத்தான். இப்பொழுது ஆசிரியர் அந்தப் பாத்திரத்தை, முதலில் தண்ணீர் ஊற்றச்சொன்னவர், பிறகு மணல், சிறுகற்கள், பெரியகற்கள் இவ்வாறாக வரிசைமாற்றி நிரப்பச் சொன்னார். அந்த மாணவனும், முதலில் தண்ணீரை ஊற்றிவிட்டு, பிறகு மணல், சிறுகற்களை நிரப்பி, பெரியகற்கள் போடும்பொழுது சிலவற்றை போடுவதற்கு இடம் இல்லை என்பதை உணர்ந்தான்.

இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர், ''இதுதான் நான் சொல்ல வந்த பாடத்தின் கருப்பொருள்'' என்றார். ''பெரியகற்கள் என்பவை நமது வாழ்க்கையில் உள்ள முக்கியமான காரியங்கள் மற்றும் குறிக்கோள்கள். சிறுகற்கள், மணல், தண்ணீர் முதலியவை மற்ற காரியங்கள். பெரியகற்களைப் பாத்திரத்தில் முதலில் நிரப்பியதுபோல் நமது நேரத்தை முக்கியமான காரியங்களுக்கே நாம் முதலில் ஒதுக்க வேண்டும். அவ்வாறு செய்தோமானால் எப்படி சிறுகற்களும், மணலும், தண்ணீரும் பெரியகற்களுக்கு நடுவில் நிரம்பியதோ, அதுபோல், மற்ற காரியங்கள் செய்வதற்கு நமக்கு நேரம் கிடைக்கும். மாறாக தண்ணீர், மணல், சிறுகற்களை நிரப்பியது போல், மற்ற காரியங்களை முதலில் செய்தோமானால், பெரியகற்களுக்கு பாத்திரத்தில் இடமில்லாமல் போனதுபோல், முக்கியமான காரியங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் செலவிட போதுமான நேரமில்லாமல் போய்விடும். ஆகவே, நமது காரியங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களுக்கே முதலிடம் கொடுத்து நேரத்தை திட்டமிட்டு செயல்பட வேண்டும்'' என்றார்.

நாமும் நமது குறிக்கோள்களுக்கும் முக்கிய காரியங்களுக்குமே முக்கியத்துவம் தருவோம்.

---

ஸ்ரீ ஹரி:

108 திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்
கீழ் நான்காவது திருக்கோயிலாக
மயிலாடுதுறை வட்டம் (குத்தாலம் அருகில்)
மாதிரிமங்களம் கிராமம் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள

**ஸ்ரீ மஹாமாரியம்மன் திருக்கோயில்**
**அஷ்டபந்தன கும்பாபிஷேகம்**

நாள் : 18-03-2004 வியாழக்கிழமை

நேரம் : காலை 8.00 மணிக்கு மேல் 9.00 மணிக்குள்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# நாமமே இறைவன்

இறைவனும், அவனுடைய திருநாமமும் வெவ்வேறு அல்ல. திருநாமம் இறைவனே. அவனுடைய திருநாமம் மனதில் தோன்றியவுடன், உள்ளம் இறைவனின் சான்னித்தியத்தால் நிரம்புகிறது. நமது சிந்தனைகளை இறைவன்பால் நிறுத்த, அவனுடைய திருநாமத்தை இடையறாமல் நினைவுகூர்வதைவிட எளிமையான வழி வேறெதுவும் இல்லை. இறைவனின் திருநாமத்தை உரக்க ஜபம் செய்யும்போது, நமது இதயத்தில் பிரேமை எனும் வெள்ளம் பெருக்கெடுத்து பரவசநிலை அடைவதை உணர்கிறோம். ஏனெனில், திருநாமத்தின் ஒலி நம் மனதை விழிப்புறச் செய்து இறைவனின் அன்பையும், பேரானந்தத்தையும் உணரச்செய்கிறது.

இறைவனின் திவ்யநாமத்தை உரக்கச் சொல்வதைவிட மனதில் ஜபம் செய்வது மிகச் சிறந்ததாயினும், நாமத்தை உரக்கச் சொல்வதால் எழும் இனிமையும், ஆனந்தமும் ஒப்பற்கரிய அனுபவம் ஆகும். பக்தனின் மனம் இசையில் லயிக்கும்போது மெய்சிலிர்த்து அவனுக்கு நாமமே ப்ரஹ்மம் என்ற அனுபவம் கிட்டுகிறது.

இறைவன் சிருஷ்டிக்கு உட்பட்டவரும், அதே சமயம் சிருஷ்டிக்கு அப்பாற்பட்டவரும் ஆவார். திருநாமம் இத்தகைய இறைவனைக் குறிக்கிறது. எங்கும் நிறைந்த, எல்லையற்ற, மாற்றமே இல்லாத, அமைதியான தத்துவமே சிருஷ்டிக்கு அப்பாற்பட்ட இறைவன் ஆகும். நாம, ரூப, சலனங்கள் கூடிய, அனைத்து ஜீவராசிகளையும், வஸ்துக்களையும் அகத்தே உடைய இந்தப் பிரபஞ்சமே இறைவனின் சிருஷ்டிக்கு உட்பட்ட அம்சம் ஆகும். திருநாமம் எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி, அதே சமயம், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதாகி, தனித்துவமும், தனித்துவத்திற்கு அப்பாற்பட்டதுமாகிய இறைவனைக் குறிக்கிறது.

இத்தகைய திவ்யநாமம் அனைத்து சிருஷ்டிக்கும் ஆதியே இல்லாத மூலகாரணமும், அதே சமயத்தில் சிருஷ்டியுமாகும். பூரணப் பொருளாகிய கடவுள் அநாமியாகிய நாமமே.

திருநாமம் ஜீவனை பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. திருநாமம் அவனை ஆன்மீக வாழ்வின் உச்சிநிலைக்கு இட்டுச்செல்கிறது. இருளில் மூழ்கிய குருட்டு ஜீவனுக்கு திவ்ய திருஷ்டியை அளிக்கிறது. இறைவனின் திருநாமம் உன்னதம் பொருந்திய விஸ்வரூப தரிசனத்தை அளிக்கவல்லது. திவ்யநாமம், ஜீவனை சிந்தனைக்கு எட்டாத இறையனுபூதி எனும் மகோன்னத சிகரத்திற்கு உயர்த்தவல்லது.

இறைவனின் திருநாமத்தின் சக்தி வெல்ல முடியாதது. வெல்வதற்கரியது என்று கருதப்படும் மனம், நாமத்தின் இதமான இசையால் ஈர்க்கப்பட்டு, பணிவுள்ளதாகவும், மென்மையாகவும், இணக்கமுள்ளதாகவும் மாறுகிறது. நாமமஹிமையால் மனமே இறைவனாக மாறுகிறது. இறைவனின் திருநாமத்தில் தஞ்சம் அடைந்தவன் பல அதிசயங்களை ஆற்ற முடியும். அவன் இயற்கையின் சக்திகளை வென்று மனித ஜீவன்களின் மனதில் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்த முடியும். திவ்யநாமம், மனித ஜீவனை நித்யானந்த, பிரேமஸ்வரூபமாக மாற்றமுடியும். நாமம் ஒரு தனிப்பட்ட ஜீவனை விராட் ஸ்வரூபனாக (cosmic reality) - அறிவிலியான ஜீவனை இறைவனாக - மாற்றமுடியும்.

திவ்யநாம பஜனை செய்யும் இடத்தில், நாமத்தின் இசைநயம் பிரேமையின் மகிமையைப் பரப்பி, அந்தச் சூழ்நிலையை தூய்மை, அமைதி, பேரானந்தம் ஆகியவற்றால் நிரம்பச் செய்கிறது.

திவ்யநாமம் பூரணத்துவம் பொருந்தியது. நாமத்தை சொல்வதே தியானம். அதனால் ஏற்படும் பரவச நிலையே சமாதி. திவ்யநாமம்தான் அன்பு, ஒளி, சக்தி, பேரானந்தம்.

**வேறு எந்த சாதனையின் உதவியுமின்றி, நாமம் ஒன்றே ஒருவனுக்கு எங்கும் இறைவனுடைய தரிசனத்தை அளிக்கவல்லது. நாமமே ஒருவனுக்கு முடிவே இல்லாத அன்பு, ஆனந்தம் எனும் கடலில் சங்கமமாவதற்கு போதுமானது என்ற கூற்றுக்கு இந்த எழுத்தாளன் உறுதி அளிக்கமுடியும்.**

இறைவனின் திவ்யநாமத்தைபோல் அனைவரும் ஒருங்கே பின்பற்றக்கூடியதும், அதே சமயம், இறைவனை அடைய

எளியதுமாகிய சாதனை முறை வேறு எதுவுமில்லை. ஒரு மஹான் கூறியுள்ளதுபோல், எவருடைய நாவில் எப்போதும் இறைவனின் திவ்யநாமம் குடிகொண்டுள்ளதோ அவரே பந்தத்திலிருந்து விடுபட்டவர் அல்லது ஜீவன்முக்தர் என்பது உண்மையான கூற்றே!

எனவே, அருமைத் தோழர்களே! நீங்கள் எந்த இனம், குலம், கோட்பாடு அல்லது நிறத்தைச் சார்ந்தவராயினும், இறைவன் நாமத்தை ஏற்றி, அதன் இனிய உறவை உணர்ந்துகொள்ளுங்கள். நாமம் எனும் அமுதத்தில் இடையறாமல் மூழ்கும் உங்கள் ஆன்மா தூய்மையுறுவது மட்டுமல்லாமல், யாவுமறிந்த, எங்கும் நிறைந்த இறைவனின் பேரொளியாலும், அன்பாலும் பிரகாசிக்கும் என்பது உறுதி. திவ்யநாமத்தை இடையறாமல் ஓதும் பயிற்சி, கீழ்ப்படியாமல் நிற்கும் மனதை இறைவனின் திருச்சித்தத்திற்கும், வல்லமைக்கும் அடிமையாக்குகிறது.

முதலில் திருநாமத்தை ஒருவன் சிரத்தை, நம்பிக்கை, ஒருமனப்பாடு ஆகியவற்றுடன் ஜபம் செய்யும்போது, முகமும், சரீரமும் ஒரு அசாதாரண ஒளியுடன் பிரகாசிக்கிறது. அவனுடைய மனம் விவேகத்தாலும், இதயம் அன்பாலும் நிரம்புகிறது. இவை யாவும் சாதகனின் மனதில் ஸத்வ குணம் மேலோங்குவதால் ஏற்படுகின்றன. பின்னர், நாமஜபத்தை அதே உற்சாகத்துடன் பின்பற்றும்போது, அவன் இந்தப் பிரபஞ்சம் அனைத்தையும் இறைவனின் உருவமாகக் காண்கிறான். இறைவனுடன் ஒருமித்த அவன் எங்கும் இறைவனின் தரிசனத்தையே காண்கிறான்.

உண்மையில் நாமமே இறைவன்.

**— ஸ்வாமி ராம்தாஸ்,**

ஆனந்தாஸ்ரமம், காஞ்சங்காடு.

---

**பிப்ரவரி 6-ந் தேதி முதல் மார்ச் 24-ந் தேதி வரை**

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞைபடி, மழை வேண்டி, சென்னையில், பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து 48 நாட்கள், ''யோகிராம்சுரத்குமார், யோகிராம்சுரத்குமார், யோகிராம்சுரத்குமார், ஜயகுருராயா'' அகண்ட நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

# மாலே மணிவண்ணா - 18

- மஹாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' — எல்லாம் விஷ்ணு மயம் என்று சொல்கின்ற வசனத்தை உள் அடக்கிய பரிபாடற் பகுதி:

*'தீவளி விசும்பு நிலம் நீர் ஐந்தும்*
*ஞாயிறும் திங்களும் அறனும் ஐவரும்*
*திதியின் சிறாரும் விதியின் மக்களும்*
*மாசுஇல் எண்மரும் பதினொரு கபிலரும்*
*தா மா இருவரும் தருமனும் மடங்கலும்*
*மூ ஏழ் உலகமும் உலகினுள் மன்பதும்*
*மாயோய் நின்வயின் பரந்தவை உரைத்தேம்*
*மாயா வாய்மொழி உரைதர வலந்து*
*வாய்மொழி ஓடை மலர்ந்த*
*தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும்*
*நீ என மொழியுமால் அந்தணர் அருமறை'*

குறிப்பு : விதியின் மக்களும் என்கின்ற ஆதித்தர் பன்னிருவரில் அடங்குமாயினும் உலக நடை நோக்கி 'ஞாயிறு' தனித்துக் கூறப்பெற்றது. காசிபன் மனைவியாகிய அதிதியின் குமாரர்கள் பன்னிருவரும் ஆதித்யரே. விவஸ்வான், அர்யமா, பூஷா, த்வஷ்டா, ஸவிதா, பகன், தாதா, விதாதா, வருணன், மித்திரன், இந்திரன், வாமனர், விஷ்ணு சகஸ்ர நாமத்தில் முறையே 52, 884, 969, 43, 951, 44, 484, 553, 268, 152 நாமங்களில் விஷ்ணுவே இவர்களாக உள்ளார் எனக்குறிக்கும் வகையில் தோத்திரங்கள் அமைந்தமை காண்க. இவர்களில் சூர்யனுக்கு ஆதித்யன் என்று பெயர். சூரியன், நல்லவன், கெட்டவன் இருவரையும் சமநோக்கோடு காண்பவர். பாகுபாடு இல்லாதவர். அவர் சந்நிதியில் எல்லாம் ஒன்றே. ''என் பிலதனை வெயில் போலக் காயுமே, அன்பிலதனை அறம்'' என்ற திருக்குறளும் இதனை வலியுறுத்தும். மன்பது-உயிர்ப்பன்மை - பல்வேறு வகையான உயிர்கள் (உயிர்களில் வேறுபாடில்லை; உடலால் தான் வேறுபாடு). வலந்து கட்டிச் சொன்னோம். தெரிந்த அளவுக்கு நாங்களாகச் சொன்னோம்; வேதம் கூறுகிறபடி முறையாகச் சொல்ல முடியவில்லை. வேதம் எழுதாக் கிளவியாதலன் அதனை

வாய்மொழி என்றார். சாமவேத சாரமாகிய திருவாய்மொழி என்பதனையும், தமிழ் வேதமாகிய திருவாசகம் என்பதனையும் ஈண்டுக் கருதுக. அருமறை - உபநிடதம். மறைமுடிவாகிய உபநிடதம் 'மறை' என்று அழைக்கப்பெறும். வேதம், மறை என்பன ஒரு பொருளாயினும் மறை என்பதை உபநிடதம் என்றும், பிறவற்றை வேதம் என்றும் வழங்குவது உரைகளில் உண்டு.

விஷ்ணுசகஸ்ரநாமத்தில் முதல் திருநாமமாகிய 'விச்வம்' என்பதற்கு 'எல்லாம்' என்று ஒரு பொருள்; உலகம் என்றும் ஒரு பொருள் உண்டு. பிரம்மம் தான் படைத்த பொருள் அனைத்திலும் தானே உட்புகுந்தது. தங்கம் நகையாவது போல், தங்கம் மூலப் பொருள் நகை செய்யப் பெற்றது; பெயரால் பலவாக வேறுபட்டாலும் மூலப் பொருள் ஒன்று தானே! அதுபோல், உலகில் உள்ள எல்லாமும் பிரம்மமே. பிரம்மத்தை தவிர வேறில்லை. அதனால், அது 'விச்வம்'— எல்லாம் என்று அழைக்கப் பெறுகிறது.

விச்வம் என்பது உலகம் என்றாகும்போது பரம்பொருளையே உலகம் என்று அழைக்கிறோம். நகை தன் நாமரூபங்களை இழந்து மூலப்பொருளாகிய தங்கம் ஆவதுபோல, உலகம் ஒடுங்குகிற போது பரம்பொருளில் லயிப்பதால் அனைத்தும் பரம்பொருளாகிறது. உலகத் தோற்றக் காரணமான பிரம்மா முதலானோரும் அந்த விஷ்ணுவே ஆகிறார்கள். அதனால், அவர்கள் பெயராலும், ஸஹஸ்ர நாமம் விஷ்ணுவைத் தோத்திரம் செய்கிறது. அதற்கு முன்னோடியாக உலகத்தைக் குறிப்பிடும் 'விச்வம்' என்னும் சொல்லால் விஷ்ணு நாம ஸ்தோத்திரம் தொடங்குகிறது.

எல்லாம் விஷ்ணுமயம் என்ற **பா**வனை வலுத்த பிறகு தன்னிடமே விஷ்ணு நிறைந்திருப்பதை ஒவ்வொருவரும் உணர முடியும். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் விஷ்ணுவிடம் ஈடுபட்டு தனது ஆத்மாவே விஷ்ணு என்று தியானம் நிலைக்கும். அவருக்கே ஸ்தோத்திரம், நமஸ்காரம் அர்ப்பணமாகும். எல்லாம் விஷ்ணு, உலகமே விஷ்ணு என்ற நாமஸ்மரணம் உண்டாக உலகமனைத்தையும் பரம்பொருளாகக் காண்கின்ற மிக உயர்ந்த அநுபூதி நிலை எட்டும் அல்லவா!

அந்த அநுபூதி நிலையை ஒவ்வொருவரும் அடையத் தக்க அற்புத வழியைப் பரிபாடல் இந்த மூன்றாம் பாடலில் தத்துவ விளக்கமாகக் காட்டிச் செல்கிறது.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் -19

ஸ்ரீ சீதாநாத்பாபாஜி என்பவர் பூர்வாச்ரமத்தில் உத்கல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் எழுதப்படிக்கத் தெரியாதவர். கள்ளம் கபடமற்ற உதார குணம் நிரம்பியவர். கோவர்த்தனத்திலுள்ள கோவிந்தகுண்டத்துக்கு அருகில் உள்ள ஸ்ரீநாத்ஜியின் கோவிலுக்கு வடக்கில் ஒரு குடிசை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார். அதிகாலை இருட்டிலேயே எழுந்திருந்து நீராடிவிட்டு கிரிதாரிக்கு சேவை செய்துவிட்டு அவர் முன்பு அமர்ந்து ஐந்து மணி நேரம் விடாமல் அழுதுகொண்டு ஆடிக்கொண்டே நாமகீர்த்தனம் செய்வார். அதற்குப் பிறகு துளஸி பூஜை செய்துவிட்டு மறுபடி ஸ்ரீநாத்ஜி முன்பு உத்கல் பாஷையில் அழுது அழுது ப்ரார்த்தனை செய்வார். மதியம் 2 மணிக்கு மாதுகரி பிக்ஷைக்குச் செல்வார். ஆனி, ஆடி மாதங்களில் சூர்யனின் ஒளிக்கதிர்களால் கோவர்த்தனகிரி ப்ரதேசம் மிகவும் உஷ்ணமாக இருக்கும். ஆனாலும், இவரது நியமத்தில் மாற்றம் இராது. கொளுத்தும் வெயிலில் பாதுகை, குடை இல்லாமல் பிக்ஷைக்குச் செல்வார். திரும்பும்போது ஒவ்வொரு வைஷ்ணவர்களின் குடிசைக்கும் சென்று தனக்குக் கிடைத்த பிக்ஷையை சிறிது சிறிது பகிர்ந்து அளித்து விட்டு வருவார்.

அவருக்குத் தெரிந்த சில க்ருஷ்ண கீர்த்தனைகளை மதுரபாவத்துடன் பாடிக்கொண்டு இருப்பார். இருவேளையும் நியமத்துடன் கோவிந்தகுண்டத்தில் நீராடுவார். இரவு இரண்டு மணிக்கு எழுந்து உட்கார்ந்து விட்டு சரியாக காலை 3 மணிக்கு, முதல்ஸ்நானத்தை முடித்துக்கொள்வார். ஒரு முறை அவருக்கு அருகில் வசித்து வந்த ஸ்ரீ அத்வைததாஸ்பாபா அவரிடம், ''இது அஸுரகாலம். இப்போது ஸ்நானம் செய்வது உசிதம் அல்ல'' என்று கூறினார். ஆனால், சீதாநாத்பாபாஜி, ''நான் என்ன செய்ய? எனக்கு சுதந்திரமே கிடையாது! ஸ்ரீநாத் என்னை எப்போது எழுப்பி விடுகின்றானோ அப்போது எழுந்துவிடுகிறேன். எப்போது குளிக்கச் சொல்கிறானோ அப்போது குளிக்கிறேன்'' என்று பதிலுரைத்தார். இவருக்கு ஸ்ரீப்ருந்தாதேவி சாக்ஷாத்காரம் ஏற்பட்டது. ஒருமுறை சீதாநாத்பாபா, அத்வைததாஸ்பாபாவிடம், ''எனக்கு ப்ருந்தாதேவியின்

மாதுர்யத்தை வர்ணனை செய்யுங்களேன் என்று கேட்டார். அத்வைததாஸ்பாபா, ''எனக்கு ப்ருந்தாதேவியின் மாதுர்யத்தைப்பற்றி என்ன தெரியும்? நான் அவளைப் பார்த்திருக்கிறேனா என்ன?'' என்றார்.

உடனே சீதாநாத்பாபா, ''அப்படியா! இதோ கேளுங்கள்'' என்று கூறி **பா**வஆவேசத்துடன் உருக்கமாக ப்ருந்தாதேவியின் ரூப மாதுர்யத்தை வர்ணிக்க வர்ணிக்க அந்த ரூப வர்ணனையைக் கேட்ட அத்வைதாஸ்பாபாவின் ஹ்ருதயத்தில் அந்த ஸ்வரூபம் தெரிய ஆரம்பித்துவிட்டது. ப்ருந்தாதேவிக்கு சீதாநாத்பாபாவிடம் எவ்வளவு கிருபை இருந்தது என்பதற்கு பூச்சி அரித்து வாடி கருகிய துளஸிச் செடியை ஸ்ரீ சீதாநாத்பாபா ஒரு முறை நீராட்டினால் தளதள என்று துளிர்க்க ஆரம்பித்துவிடும் அதிசயமே சாட்சி.

ஸ்ரீ சீதாநாத்பாபா மறைவதற்கு இரண்டு மூன்று நாட்கள் முன்பு அவருக்கு ஜுரமும் பேதியும் கண்டது. அப்போதும் அவரது நியமத்தில் மாற்றம் ஏற்படவில்லை. கடைசிநாள் இரவு அவர் மிகவும் அஸக்தியுடன் படுத்திருந்தார். மார்கழி மாதக் குளிர் வேறு பயங்கரமாக இருந்தது. அத்வைததாஸ்பாபா இரவு முழுவதும் விழித்துக் கொண்டு அவரைக் கண்காணித்தார். சரியாக விடியற்காலை மூன்று மணிக்கு கோவிந்தகுண்டத்தில் யாரோ குதிக்கும் சப்தம் கேட்டு வெளியேவந்து பார்த்தார். சீதாநாத்பாபாதான் நீராடிவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்! அன்று பகல் 12 மணிக்கு அத்வைதாஸ பாபாவை அழைத்து ஸ்ரீ சீதாநாத்பாபா, ''அத்வைததாஸ்! என்னை ஸ்ரீநாத் முன்பு அழைத்துச் செல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். ''நான் உங்களைத் தனியாக எப்படி தூக்கிச் செல்ல முடியும்'' என்றார் அவர். உடனே சீதாநாத்பாபா, ''தூக்க வேண்டாம்! கைத்தாங்கலாக அழைத்துச் செல்லுங்களேன்'' என்றார்.

ஸ்ரீ அத்வைததாஸ்பாபா மெதுவாக அவரை கைப்பிடித்து தாங்கிக்கொண்டு ஸ்ரீநாத்ஜியின் முன்பு கொண்டு நிறுத்தினார். ஸ்ரீநாத்ஜியின் முன்பு வ்ருக்ஷத்தின் அடியில் உள்ள மேடையில் ஸ்ரீ சீதாநாத்பாபா மெதுவாக அமர்ந்து கொண்டார். அத்வைதாஸ் பாபாவிடம், ''குண்டத்திலிருந்து நீர் எடுத்து வந்து என்னை நீராட்டுங்கள்'' என்றார். ஸ்னானத்திற்கு பிறகு, ''எனக்குத்

திலகமிடுங்கள்'' என்றார். திலகமிட்டு முடிந்ததும், ''அனைவரும் ப்ரஸாதம் பெற்றுக்கொண்டாயிற்றா?'' என்று கேட்டார். அத்வைததாஸ் எல்லோரும் ப்ரஸாதம் சாப்பிட்டாயிற்று என்றதும், ''சரி அப்படி என்றால் துளஸிக்கு ஸ்நானம் செய்வித்து அந்த ஸ்நான நீரை என் வாயில் சிறிது விடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். அத்வைததாஸ்பாபா அப்படியே செய்ய துளஸி ஜலம் வாயில் விட்டு விழுங்கிய உடன் சீதாநாத்பாபா தன் உடலை விட்டு ப்ருந்தாதேவியின் கிருபையால் ஸ்ரீராதாராணியின் சரணத்தை அடைந்தார்! ஸ்ரீ சீதாநாத்பாபாக்கு ஜே!.

**— ஜயந்தி ஜானகிராமன்**

ஒவ்வொரு மாதமும் மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 102

பக்தி நூல்களில் பக்தனுக்கு 19 விதமான உயர்ந்த **பா**வ லக்ஷணங்கள் உள்ளதாகச் சொல்கின்றனர். பக்தனுக்கு மயிர்க்கூச்சல் ஏற்படும். ஒவ்வொரு மயிர்க்காலிலிருந்தும் ரத்தம் வெளிவரும் என பக்தி நூல்களில் இந்த **பா**வலக்ஷணங்களைப் பற்றி கூறப்பட்டு உள்ளது. பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரிடம் இதை நேரிடையாகப் பார்க்கும்பொழுதுதான், இது சித்திக்கக்கூடிய விஷயங்கள் எனத் தோன்றுகிறது. அல்லாவிடில், இதை நம்ப மறுப்போம்!

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள், தான் யாருக்கும் குரு இல்லை, தனக்கு யாரும் சிஷ்யர்கள் இல்லை என்று சொல்லி வந்துள்ளார். அப்படி இருக்க அவரை குருவாக வைத்துக்கொண்டு அவரது ஜயந்தியைக் கொண்டாடுவது சரியா என்றால், யார் தன்னை குரு என்றோ, தன்னை அண்டியவர்களை தனது சிஷ்யர்கள் என்றோ கூறுகிறாரோ அவரை உத்தம குரு என சொல்ல முடியாது. எப்பொழுது, ஒரு குருவிற்கு, ''தான் குரு, இவன் சீடன்'' என்று அந்த விஷயத்திலும் கூட Duality (த்வைதம் - இரண்டாக, வேறாக எண்ணுவது) இல்லையோ, அவரே உத்தம குரு. பகவான் ரமண மஹரிஷிகள் அப்படி இருந்ததால் (Duality அற்றவராக), அவர் உத்தம குருவாகிவிட்டார். அவருடைய மார்க்கத்தில் வரும் அனைவருமே அவரது சீடர்கள். அதனாலும், அவரது ஜயந்தியைக் கொண்டாடுவது அவசியமாகிறது. (சீடர்கள் குருவின் ஜயந்தியை கொண்டாடுவது அவசியம்)

மஹாத்மாக்களின் சரித்திரங்களை எடுத்துப் பார்க்கும் பொழுது, அவர்களுக்கு சிறுவயதிலேயே விவேகம் ஏற்படுகிறது. படிப்படியாக வைராக்யம், ஞானம் ஏற்பட்டு, தியான வாழ்க்கையில் சென்று, சன்யாஸம் கைக்கொள்கின்றனர். உலகம், இதை மிக ஆச்சரியமாகப் பார்க்கிறது. சிறுவயதில் வைராக்கியத்தினால், சன்யாஸம் மேற்கொள்வதே உலகத்திற்கு ஆச்சர்யம். ஆனால், 16,

17 வயதிலேயே ரமண மஹரிஷிகளுக்கு ஏற்பட்டது விவேக வைராக்கியமில்லை. பூரண அனுபூதி ஆகும். இதில், மேலும் ஒரு விசேஷம் உள்ளது. என்னவென்றால், தன்னை ஒரு ஸ்வாமியின் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு வரும் மஹாத்மாக்கள் கூட, பல வருடங்கள் கடும் தவம் செய்து, எந்த ஒரு அனுபூதியைப் பெற்றனரோ, அதை ரமண மஹரிஷிகள் ஒரு க்ஷணத்திலேயே பெற்றார். ஆதலால், ரமண மஹரிஷிகள் மஹாத்மாக்களில் மிகவும் சிரேஷ்டமானவர். அபூர்வமான விஷயங்களை லௌகீகத்திலேயே கூட கொண்டாடுகிறோம். அப்படி இருக்க, தெய்வீக வாழ்க்கையில் இருக்கும் நாம், அபூர்வமான ரமண மஹரிஷிகளின் ஜயந்தியைக் கொண்டாடவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியமே இல்லை.

ஞானியின் நிலைகளில் 4 வகை சொல்லி உள்ளது. அதில் இவர் அடைந்த நிலை மிகவும் உயர்ந்த நிலை. மிகவும் உயர்ந்ததான இந்த நிலையை, முன்னர் ஜடபரதர், பகீரதன், ஜனகர் போன்ற மஹாத்மாக்களே அடைந்துள்ளனர். இது மிகவும் அபூர்வமான, மிகவும் உயர்ந்த நிலை. யாரோ ஒருவருக்கே இது ஸித்திக்கிறது.

இப்பேர்ப்பட்ட உயர்ந்த நிலையில் பகவான் ரமணர் வந்து அமர்ந்த க்ஷேத்ரம் என்பது, மிகவும் உயர்ந்த க்ஷேத்ரமான அருணாசலம். ஒரு தாமரைப் புஷ்பமானது தனியாக இருப்பதைக் காட்டிலும், ஒரு ஓடையின் நடுவில் இருந்தால் மிகவும் அழகாக இருக்கும். அதுபோல், ஒரு ஓடை இருந்து, அதில் தாமரைப் புஷ்பங்களே இல்லை என்றால், அதுவும் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. அந்த ஓடையில் தாமரைப் புஷ்பம் இருக்கும்பொழுது, எப்படி ஓடையினால் தாமரைப் புஷ்பத்திற்கு ஒரு கௌரவம் வருகிறதோ, எப்படி தாமரைப் புஷ்பத்தினால் ஓடை பரிமளிக்கிறதோ, அதுபோல் இப்பேர்ப்பட்ட மஹாத்மாவினால் அருணாசலத்திற்குப் பெருமை. அருணாசலம் மிக உயர்ந்த க்ஷேத்ரமாக இருப்பதினால் ரமண மஹரிஷிகளுக்குப் பெருமை. க்ஷேத்ரங்களில் உயர்ந்ததான அருணாசலமும், ப்ரஹ்மநிஷ்டர்களில் உயர்ந்தவரான பகவான் ரமணரும் சேர்வது மிகவும் ஆச்சரியம் தானே!

இதிஹாஸ புராணங்களில், க்ஷேத்ர மாஹாத்ம்யங்கள் சொல்லப்பட்டுள்ளது. ஹிந்துக்களான நாம் இன்று வரை, காசி யாத்திரை சென்று வருகிறோம். காசி க்ஷேத்ரத்தில் கங்கா ஸ்நானம் செய்தால், அதற்கு ஒருவிதமான புண்ணியம் என்று ஆரம்பித்து அங்குள்ள காலபைரவர், பிந்துமாதவர், துண்டி கணபதி, அன்னபூரணி என்று தெய்வங்களைப் பற்றியும், பல மஹத்தான தத்துவங்களைப் பற்றியும், காசி க்ஷேத்ர புராணங்களில் சொல்லி இருக்கிறது.

ஆனால், இன்று நாம் காசிக்குச் சென்று வந்தால் நமக்கு இவையா தெரிகிறது? ''இந்த காசியில் நாய் ஓடுகிறதே, சாக்கடையை கங்கையில் கலக்குகிறானே, இங்கு ஒரே கூட்டமாக உள்ளதே, இந்த பண்டா ஒரே காசு பிடுங்குகிறானே'' எனத் தோன்றுகிறது. நமக்கு காசி க்ஷேத்ரத்தின் ஒரு மஹத்வம் புரியாமல் போய்விடுகிறது அல்லவா? நமக்குத் தெரியவுமில்லை, புரியவும் இல்லை என்பதினால் க்ஷேத்ர மஹாத்மியங்களைக் கட்டுக்கதை என சொல்லிவிட முடியாது. ஏனெனில், இவற்றைக் கொடுத்தவர்கள் மஹாத்மாக்கள். மஹாத்மாக்கள் தாங்கள் எதை தரிசனம் செய்தனரோ, அவற்றையே எழுதி வைத்துள்ளனர்.

அப்படி மஹாத்மாக்கள், புராணங்களில் எழுதி வைத்துள்ள விஷயங்கள் மற்றொரு மஹாத்மாவிற்கு ப்ரத்யக்ஷமாக (நேருக்கு நேராக) அனுபவமாகவும் செய்கிறது. ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் தனது ப்ரியபக்தரான மதுர்பாபுவுடன் காசி யாத்திரை செல்கிறார். காசி சென்றவுடன், அவருக்கு காசி முழுவதும் ஒரே ஜோதிமயமாகத் தெரிகிறது. அந்த க்ஷேத்ரம் முழுவதும் எங்கும் பொன் மாதிரி தகதகவென ஜொலிக்கிறது. ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் காசியில் மல விஸர்ஜனங்களைக் கூட கழிப்பது பாவம் எனக் கருதி, மதுர்பாபுவிடம் கெஞ்சி, ஒரு பல்லக்கில் ஏறி, மூன்று யோசனை தள்ளி, காசிக்கு வெளியில் சென்று மல, விஸர்ஜனங்களைக் கழித்து வருகிறார். காசியில் கால் வைப்பதற்குக்கூட அவருக்கு பயமாக இருக்கிறது. ஆக, காசியின் நிஜ நிலை அவருக்குத் தெரிகிறது. 3 - 4 நாட்கள் கழித்து அவருக்கு அந்த நிலை கலைகிறது. பாவம் கலைந்தபின் ஒருநாள் மதுர்பாபு தன்னுடைய பித்ருக்களுக்கு இந்த

வாரா, அசி என்ற நதிகள் சேருவதற்கு நடுவில் உள்ள 'காட்'டுக்கு பிண்டம் போடுவதற்காகப் படகில் செல்கிறார். பரமஹம்ஸரும் அவருடன் செல்கிறார். அப்படி அவர்கள் படகில் செல்லும்பொழுது, படகில் உட்கார்ந்திருந்த பரமஹம்ஸர் 'திடீர்' என எழுந்து ஓடுகிறார். மதுர்பாபுவும், படகோட்டியும், கூட இருந்த பண்டாவும் பயந்து விடுகின்றனர். எங்கே விழுந்துவிடப் போகிறாரோ என. ஆனால், அப்படியே ஓடிய பரமஹம்ஸர் ஓரிடத்தில் சிலையாக மாறி நின்று விடுகிறார். பாவசமாதி அவருக்கு ஏற்படுகிறது.

சிறிது நேரம் கழித்து, பாவசமாதி கலைந்தவுடன் மதுர்பாபு, ''பாவா! நீங்கள் இங்கு எதை பார்த்தீர்கள். ஏன் உங்களுக்கு பாவசமாதி வந்தது'' என வினவ, பரமஹம்ஸர், ''இந்த மணிகர்ணிகா காட்டில் மயானத்தில் தலை நிறைய ஜடாமுடியுடன், அதில் நிறைய ருத்ராக்ஷம், சந்திரகலையுடன், கங்காதரனாய் பரமேஸ்வரன் உட்கார்ந்து உள்ளான். பக்கத்தில் பார்வதியும் அமர்ந்துள்ளாள். செத்துப் போகும் ஒவ்வொரு பிணத்தையும் எடுத்து, பரமேஸ்வரன் தனது வலதுமடியில் போட்டுக்கொண்டு, வலது காதில் தாரக மந்திரத்தை ஓதி, கரையேற்றுவதை நான் பார்த்தேன்'' என்கிறார். அவர் இப்படிச் சொன்னவுடன், கூட இருந்த பண்டா, காசி புராணத்தில் 4-வது காண்டத்தை காண்பிக்க, அதில் இவர் சொன்னது அப்படியே இருக்கிறது. இப்படி தங்களுக்கு தரிசனம் ஆவதையே மஹாத்மாக்கள் எழுதி வைத்துள்ளனர். அதுவேதான், பின்னர் வேறு மஹாத்மாக்களுக்கு தரிசனமும் ஆகிறது. (தொடரும்)

---

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# செய்திகள்

### ஜனவரி 25-ந் தேதி

சென்னை குரோம்பேட்டை, ஸ்ரீ தனுஷ்கோடி கோதண்டராமர் திருக்கோயிலுக்கு மாலை 5.30 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்து அருளுரை வழங்கினார்கள். மாலை 6 மணியளவில் குரோம்பேட்டை SRDS Vivekananda Vidyalaya பள்ளிக்கு விஜயம் செய்தார்கள்.

### ஜனவரி 26-ந் தேதி

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் ப்ரதிஷ்டா தினத்தன்று** காலையில், ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி திருமஞ்சனம் செய்தார்கள். மாலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி, 'நாம பிரபாவம்' பற்றி அருளுரை நிகழ்த்தினார்கள்.

### ஜனவரி 28-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை

பக்தர்களுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி, நவதிருப்பதி யாத்திரை சென்று அங்குள்ள திருக்கோயில்களை தரிசனம் செய்தார்கள். ஸ்ரீவைகுண்டத்தில், ஜனவரி 30-ந் தேதி ராதாகல்யாணம் நடைபெற்றது.

### பிப்ரவரி 1-ந் தேதி

அவிநாசி, அபிராமி Cold Storages (P) Ltd., சார்பில் கட்டப்பட்டு உள்ள க்ஷிப்ரகணபதி நூதன ஆலய கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### பிப்ரவரி 2-ந் தேதி

மதுரபுரியில், ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி, மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் செய்தார்கள்.

### பிப்ரவரி 3-ந் தேதி

ராஜபாளையம் P.S. குமாரசுவாமிராஜா கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ க்ருஷ்ணமராஜா அவர்களின் பிறந்த தினத்தை ஒட்டி நடைபெற்ற விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

### பிப்ரவரி 4-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை

திருச்சி, திருவானைக்காவல், சுமங்கலிமஹால் கல்யாண மண்டபத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி ''மஹாபக்த சரித்ரங்கள்'' பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 4-ந் தேதி**

பரமகுடி, முத்தாலம்மன்படித்துறை ஸ்ரீ செந்தில் ஆலயம் ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதி கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**பிப்ரவரி 5-ந் தேதி**

108 திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின் கீழ் மூன்றாவது கோயிலாக திருவிடைமருதூர் அருகிலுள்ள விஸ்வநாதபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள ஸ்ரீ மஹாமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

**பிப்ரவரி 8-ந் தேதி**

மன்னார்குடி, கீழ முதல் தெருவில் உள்ள சங்கர மடத்தில் நடைபெற்ற ராதாகல்யாண வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**பிப்ரவரி 12-ந் தேதி**

சென்னை, வில்லிவாக்கம், ஸ்ரீநிவாஸ நகரில், செல்வ ராஜேஸ்வரி ஹாலில் ஸ்ரீ ராம் சமர்த்த பிரேமி மண்டலி சார்பில் நடைபெற்ற 70-ஆம் ஆண்டு சமர்த்த ராம்தாஸ் வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டு, இரவு 7.00 மணி முதல் 8.30 வரை ''ராமநாமப்ரபாவம்'' பற்றி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 17-ந் தேதி**

சென்னை, மேற்கு மாம்பலம், அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில், ஸ்ரீ வைதிக பரிபாலன ஸபா சார்பில் நடைபெற்ற 19-ஆம் ஆண்டு ஸ்ரீ மஹாசிவராத்ரி மஹாருத்ர மஹோத்ஸவத்தில் இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 23-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

ஈரோடு, வெள்ளக்கோவில், ஸ்ரீ சோழீஸ்வரர் திருக்கோயிலில் இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 26-ந் தேதி**

ஸ்ரீ ஸ்வாமிஜி, கோவில்பட்டி, வெள்ளாளர் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு மாலையில் விஜயம் செய்து அருளுரை வழங்கினார்கள். கோவில்பட்டி, ஸ்ரீ சாரதா கல்யாண மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் நடைபெற்றது.

**பிப்ரவரி 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் அஹோராத்ரமாக (24 மணி நேரமும்) அகண்ட ''ஹரே ராம....'' மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது.

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளின் இரண்டாவது ப்ரதிஷ்டானதினம்

**தேதி : 26.1.2004**

**இடம் : மதுரபுரி, மஹாரண்யம்**

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ப்ரேரணையால், அவரது அருளாசியுடன் நம்முடைய ஸத்ஸங்கத்தின் அன்பர்களான கேசவன், வசந்த், மாதவன், ராமச்சந்திரன், ராமானுஜம், கண்ணன், குருமூர்த்தி, குமரன் மற்றும் பல அன்பர்களின் தீவிரமான பிரச்சாரத்தின் காரணமாக இன்று தமிழ்நாட்டின் பல பாகங்களில், அதிலும் பல கிராமங்களில், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பல பகுதிகளில் 'மஹாமந்திர' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

ஜனவரி மாதம் 26-ம் தேதி, வஸந்த பஞ்சமி அன்று மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளின் இரண்டாவது ப்ரதிஷ்டா தினம். தமிழ்நாட்டில் அந்தந்த ஊரில் தொடர்ந்து நாமஸங்கீர்த்தனம் நடைபெறுவதற்குப் பல அன்பர்கள் பொறுப்பேற்று மிகவும் சிரத்தையுடனும், ஆசையுடனும், நாமஸங்கீர்த்தனம் செய்து வருகின்றனர். அவர்களை எல்லாம் நம்முடைய ஆஸ்ரமத்திற்கு வரச்செய்து எல்லோருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி பிரசாதம் வழங்கியும், நாமவஸ்த்ரம் அணிவித்தும் கௌரவப்படுத்தினார்கள். Mementoவும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அச்சமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி பகவந்நாமாவின் மஹிமையைப் பற்றி உரையாற்றினார்கள். பகவந்நாமா சொல்லிக்கொண்டே இருந்தால் மழை பெய்து நாட்டிற்கு நன்மை ஏற்படும் என்று அப்பொழுது கூறினார்கள். அதற்கேற்றாற்போல் அன்று இரவும் மறுநாள் காலையும் சென்னையில் மழை பெய்தது, பகவந்நாமப் பிரபாவத்திற்குச் சான்றாக அமைந்தது.

**Dr. A. BHAGYANATHAN**
**Personal Secretary to**
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**மங்களானி பவந்து**